AKHBAR : THINAKURAL

TARIKH : 4.4.2013

M/S : 6

# 1,350 பேரில் 921 இந்தியர்கள்

Thinakural 4.4.2013 M/S 6

புத்ரா ஜெயா, ஏப்.4-

இவ்வருடம் முதல் மூன்று மாதங்கள் காலக்கட்டத்தில் மொத்த 44,380 இந்திய விண்ணப்பதாரர்கள் எஸ்பிஏ வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களில் 1,350 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேர்காணலுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 921. இவர்களில் 403 இந்தியர்கள் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற எஸ்பிஏ என்ற பொதுச் சேவை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாஹ்முட் அடாம் தெரிவித்தார்.

நேற்று பல்வேறு இலாகா தலைவர்களுடன் எஸ்பிஏ ஆணையம் ஒரு சிறப்பு சந்திப்புக் கூட்டத்தை நடத்தியது. அதன் பிறகு ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாஹ்முட் இந்திய ஆள் சேர்ப்பு சம்பந்தமாக பல்வேறு விவரங்களை வெளியிட்டார். மூன்று மாத காலக்கட்டத்தில் இந்திய விண்ணப்பங்களின் எண்ணிக்கை அமோகமாக இருக்கிறது. பொதுச் சேவைத் துறையில் சேர்வதற்கு இந்தியர்கள் காட்டும் அதிக ஆர்வத்தை இது பறைசாற்றுகிறது என்று டான்ஸ்ரீ மாஹ்முட் சுட்டிக்காட்டினார். நேர்காணலுக்கு வந்த இந்திய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்திய ஆள்சேர்ப்பு 43.76 விழுக்காடு என்று அவர் தெரிவித்தார்.

எஸ்பிஏ வேலை காலியிடங்கள் 60,000. ஆனால், மாநில எஸ்பிஏ, போலீஸ் ஆணையம், ராணுவத் துறை ஆணையம், ஆசிரியர் சேவைத் துறை



ஆணையம், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வேலை காலியிடங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் இது மொத்தம் 80,442 என்று டான்ஸ்ரீ மாஹ்முட் தெரிவித்தார்.

ஒன்பது மாதங்களில் அந்த வேலை காலியிடங்கள் நிரப்பப்படும். இது இந்தியர் பங்கேற்பினை மேம்படுத்துவதாகவும் இருக்கும். பிடிடி என்ற வேலைக்கான எழுத்துப்பூர்வமான சோதனை இம்மாதம் ஏப்ரல் 13ஆம் தேதி நடைபெறும். இத்தேர்வினை எழுதுவதற்கு 61,853 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே, இத்தேர்வினை எழுதி தேர்ச்சியடைந்தவர்கள் மறுபடியும் இந்த சிறப்புத் தேர்வு எழுத வேண்டி அவசியமில்லை. காரணம் தேர்ச்சி ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்றும் டான்ஸ்ரீ மாஹ்முட் விவரித்தார்.

Penolong Pegawai Tadbir Gred 27 என்ற வேலைக்கான நேர்காணல் இம்மாதம் ஏப்ரல் மத்தியில் நடத்தப்படும். 49,152 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வேலைக்கு 100 காலியிடங்கள் இருக்கின்றது. இந்த சிறப்பு மாநாட்டில் எஸ்பிஏ என்ற பொதுச்சேவை ஆணையத்தின் துணைச் செயலாளர் ஸைனால் அபிடின் அரசு ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை என்ற தலைப்பில் ஓர் அருமையான ஆய்வுக் கட்டுரையை படைத்து, ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாஹ்முட் அடாமின் பாராட்டினைப் பெற்றார். இந்த ஆய்வுக் கட்டுரை பல்வேறு விஷயங்களை தெளிவுப்படுத்தியது. ஆணையத் தலைவர் இவருக்கு நினைவுச் சின்னம்

AKHBAR : MALAYSIA NANBAN

TARIKH : 4.4.2013

M/S : 2

# 921 இந்தியரில் 403 பேர் தேர்வு

Nanban M/S 2 4.4.2013



புத்ரா ஜெயா, ஏப். 4 –

இவ்வருடம் முதல் மூன்று மாத காலக்கட்டத்தில் மொத்த 44,380 இந்திய விண்ணப்பதாரர்கள் எஸ்பிஏ வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். இதில் 1,350 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேர்காணலுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 921.

இதில் 403 இந்தியர்கள் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று எஸ்பிஏ என்ற பொதுச்சேவை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார். நேற்று பல்வேறு இலாகா தலைவர்களுடன் எஸ்பிஏ ஆணையம் சிறப்பு சந்திப்புக் கூட்டத்தை நடத்தியது. அதன் பிறகு ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் இந்தியர் ஆள் சேர்ப்பு சம்பந்தமாக பல்வேறு விவரங்களை வெளியிட்டார். மூன்று மாத காலக்கட்டத்தில் இந்தியர் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அமோகமாக இருக்கிறது. பொதுச் சேவைத் துறையில் சேர்வதற்கு இந்தியர்கள் காட்டும் அதீத ஆர்வத்தை இது பறைசாற்றுகிறது என்று டான்ஸ்ரீ மாமூட் அடாம் சுட்டிக்காட்டினார். நேர்காணலுக்கு வந்த இந்திய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியர் ஆள் சேர்ப்பு 43 – 76 விழுக்காடு என்று அவர் தெரிவித்தார்.

எஸ்பிஏ வேலை காலியிடங்கள் 60,000. ஆனால் மாநில எஸ்பிஏ, காவல் துறை ஆணையம், ராணுவத்துறை ஆணையம், ஆசிரியர் சேவைத்துறை ஆணையம், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வேலை காலியிடங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இது மொத்தம் 80,442 என்று டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார். அடுத்த 9 மாதங்களில் அநேக வேலை காலியிடங்கள் நிரப்பப்படும். இது இந்தியர் பங்கேற்பினை மேம்படுத்துவதாகவும் இருக்கும். பிடிடி என்ற வேலைக்கான எழுத்துப்பூர்வமான சோதனை இம்மாதம் ஏப்ரல் 13ஆம் தேதியன்று நடைபெறும். இத்தேர்வினை எழுதுவதற்கு 61,853பேர் அழைக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே இத்தேர்வினை எழுதி தேர்ச்சியடைந்தவர்கள் மறுபடியும் இந்த சிறப்பு தேர்வு எழுதவேண்டிய அவசியமில்லை. காரணம் தேர்ச்சி ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்றும் டான்ஸ்ரீ மாமூட் அடாம் விவரித்தார்.

Penolong Pegawai Tadbir Gred 27 என்ற வேலைக்கான நேர்காணல் இம்மாதம் ஏப்ரல் மத்தியில் நடத்தப்படும். 49,152 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டு 100 காலியிடங்கள் இருக்கின்றன.

இந்த சிறப்பு மாநாட்டில் எஸ்பிஏ பெற்ற பொதுச் சேவை ஆணையத்தின் துணைச் செயலாளர் ஜைனல் அபிடின் அரசு ஊழியர்களுக்கு மருத்துவ பரிசோதனை என்ற தலைப்பில் ஓர் அருமையான ஆய்வுக் கட்டுரையைப் படைத்து, ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாமின் பாராட்டினை பெற்றார். இந்த ஆய்வுக் கட்டுரை பல்வேறு விஷயங்களைத் தெளிவுபடுத்தியது. ஆணையத் தலைவர் இவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி சிறப்பித்தார்.

AKHBAR : TAMIL NESAN

TARIKH : 4.4.2013

M/S : 2

# அரசுத் துறை வேலைகளுக்கு 44,380 இந்தியர்கள் விண்ணப்பம்:

# 403 பேர் தேர்வு

Tamil Nesan
4.4.2013
M/S 2

## டான்ஸ்ரீ மாமூட் அடாம் தகவல்



டான்ஸ்ரீ மாமூட் அடாம் செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கிறார். அருகில் ஆணையத்தின் செயலாளர் டத்தோ ரம்லி மற்றும் துணைச் செயலாளர் புவான் லிம்.



ஜைனால் அபிடின்.

**புத்ரா ஜெயா, ஏப். 4-**

இவ்வருடம் முதல் மூன்று மாத காலக்கட்டத்தில் மொத்தம் 44,380 இந்திய விண்ணப்பதாரர்கள் எஸ்பிஏ வேலைக்கு விண்ணப்பம் செய்திருந் தனர். இதில் 1,350 பேர் நேர்க் காணலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேர்க் காணலுக்கு வந்தவர்களின் எண்ணிக் கை 921. இதில் 403 இந்தியர்கள் வேலைக்கு தேர்ந் தெடுக்கப்பட்டனர் என்று எஸ்பிஏ என்ற பொதுச் சேவை ஆணையத்

ஓர் சிறப்பு சந்திப்புக்கூட்டத்தை நடத்தியது. அதன் பிறகு ஆணையத்தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் இந்திய ஆள் சேர்ப்பு சம்பந்தமாக பல்வேறு விவரங்களை வெளியிட்டார். மூன்று மாத காலக்கட்டத்தில் இந்திய விண்ணப் பங்களின் எண்ணிக்கை அமோக மாக இருக்கிறது.

பொதுச் சேவைத் துறையில் சேர்வதற்கு இந்தியர்கள் காட்டும் அதே ஆர்வத்தை இது

யுடன் ஒப்பிடுகையில் இந்திய ஆள் சேர்ப்பு 43.76 விழுக்காடு என்று அவர் தெரிவித்தார். எஸ்.பி.ஏ. வேலை காலியிடங்கள் 60,000. ஆனால் மாநில எஸ்.பி.ஏ. காவல்துறை ஆணையம், இராணுவத்துறை ஆணையம், ஆசிரியர் சேவைத் துறை ஆணையம், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வேலை காலியிடங் களை கணக்கில் எடுத்துக் கொண்டால் இது மொத்தம் 8,442 என்று மாமூட் அடாம் தெரிவித்தார். 9 மாதங்களில்

கான எழுத்துபூர்வமான சோதனை இம்மாதம் ஏப்ரல் 13ஆம் தேதியன்று நடைபெறும். இத்தேர்வை எழுது வதற்கு 61,853 பேர் அழைக்கப்பட் டுள்ளனர். ஏற்கெனவே இத்தேர் வினை எழுதி தேர்ச்சியடைந்தவர் கள் மறுபடியும் இந்த சிறப்பு தேர்வு எழுதவேண்டிய அவசியமில்லை. காரணம் தேர்ச்சி ஐந்து ஆண்டு களுக்கு செல்லும்படி யாகும் என்றும் அவர் விவரித்தார்.

'Penolong Pegawai Tadbir Gred 27' என்ற வேலைக்கான நேர்க் காணல் இம்மாதம் ஏப்ரல் மத்தியில் நடத்தப்படும். 49,152 பேர் நேர்க் காணலுக்கு அழைக்கப்பட் டுள்ளனர். இவ்வேலைக்கு 100 காலியிடங்கள் இருக்கின்றன. இந்த சிறப்பு மாநாட்டில் எஸ்.பி.எ. என்ற பொதுச் சேவை ஆணையத்தின் துணைச் செயலாளர் ஜைனால் அபிடின் அரசு ஊழியர்களுக்கு மருத்துவ பரிசோதனை என்ற தலைப்பில் ஓர் அருமையான ஆய்வுக்கட்டுரையை படைத்து, ஆணையத்தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாமின் பாராட்டினை பெற்றார். இந்த ஆய்வுக் கட்டுரை பல்வேறு

AKHBAR : MAKKAL OSAI

TARIKH : 4.4.2013

M/S : 13

# பொதுச் சேவைத் துறையில் 1,350 பேரில் 921 இந்தியர்கள் தேர்வு




கோலாலம்பூர், ஏப். 4- இவ்வருடம் முதல் மூன்று மாத காலகட்டத்தில் மொத்தம் 44,380 இந்திய விண்ணப்பதாரர்கள் எஸ்பிஏ வேலைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். இதில் 1,350 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேர்காணலுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 921. இதில் 403 இந்தியர்கள் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று எஸ்பிஏ என்ற பொதுச் சேவை ஆணையத்தின் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

நேற்று பல்வேறு இலாகா தலைவர்களுடன் எஸ்பிஏ ஆணையம் ஒரு சிறப்பு சந்திப்புக் கூட்டத்தை நடத்தியது. அதன்பிறகு ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாம் இந்திய ஆள் சேர்ப்பு சம்பந்தமாகப் பல்வேறு விவரங்களை வெளியிட்டார். மூன்று மாத காலகட்டத்தில் இந்தியர்கள் செய்த விண்ணப் பங்களின் எண் ணிக்கை அமோகமாக இருக்கிறது. பொதுச் சேவைத் துறையில் சேர்வ தற்கு இந்தியர்கள் காட்டும் அதீத ஆர்வத்தை இது பறைசாற்றுகிறது என்று டான்ஸ்ரீ மாமூட் அடாம் சுட்டிக்காட்டினார். நேர்காணலுக்கு வந்த இந்திய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்திய ஆள் சேர்ப்பு 43.76 விழுக்காடு என்று அவர் தெரிவித்தார். எஸ்பிஏ வேலை காலியிடங்கள் 60,000.

ஆனால், மாநில எஸ்பிஏ, காவல் துறை ஆணையம், ராணுவத் துறை ஆணையம், ஆசிரியர் சேவைத் துறை ஆணையம், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வேலை காலியிடங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இது மொத்தம் 80,442 என்று டான்ஸ்ரீ மாமூட் அடாம் தெரிவித்தார்.

எஞ்சிய 9 மாதங்களில் அநேக வேலை காலியிடங்கள் நிரப்பப்படும். இது இந்தியர் பங்கேற்பினை மேம்படுத்துவ தாகவும் இருக்கும். பிடிடி (ஞகூனு) என்ற வேலைக்கான எழுத்துப்பூர்வமான சோதனை இம்மாதம் ஏப்ரல் 13ஆம் தேதி நடைபெறும். இத்தேர்வினை எழுதுவ தற்கு 61,853 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே இத்தேர்வினை எழுதி தேர்ச்சியடைந்தவர்கள் மறுபடியும் இந்தத் தேர்வு எழுத வேண்டிய அவசியமில்லை. காரணம் இந்தத் தேர்ச்சி ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என்றும் டான்ஸ்ரீ மாமூட் அடாம் விவரித்தார். பெனோலோங் பெகாவாய் தட்பிர் கிரேட் 27 என்ற வேலைக்கான நேர்காணல் இம்மாதம் ஏப்ரல் மாத மத்தியில் நடத்தப்படும். 49,152 பேர் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு 100 காலியிடங்கள் உள்ளன. இந்தச் சிறப்பு மாநாட்டில் எஸ்பிஏ என்ற பொதுச் சேவை ஆணையத்தின் துணைச் செயலாளர் ஸைனால் அபிடின் அரசு ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை என்ற தலைப்பில் ஓர் அருமையான ஆய்வுக் கட்டுரையைப் படைத்து, ஆணையத் தலைவர் டான்ஸ்ரீ மாமூட் அடாமின் பாராட்டினைப் பெற்றார். இந்த ஆய்வுக் கட்டுரை பல்வேறு விஷயங்களைத் தெளிவுபடுத்தியது. ஆணையத் தலைவர் இவருக்கு நினைவு சின்னம் வழங்கி சிறப்பித்தார்.

Terjemahan Akhbar Malaysian Nanbam, Tamil Nesan, Makkai Osai dan Thinakural

**DARIPADA 921 JUMLAH CALON INDIA, SERAMAI 403 CALON TELAH BERJAYA DIPILIH.**

Suruhanjaya Perkhidmatan Awam Malaysia (S.P.A) telah mengadakan satu Sesi Interaksi dengan Kementerian dan Jabatan di *Putrajaya International Convention Centre* (PICC) di Putrajaya semalam. Menurut statistik yang dikeluarkan oleh S.P.A semalam, pada tahun ini dari Januari hingga Mac sebanyak 44,380 calon India telah membuat permohonan untuk menjawat jawatan dalam perkhidmatan awam di laman web S.P.A manakala seramai 1,350 calon telah berjaya dipanggil untuk temu duga dan jumlah yang telah hadir temuduga pula adalah seramai 921 calon. Daripada jumlah tersebut, sebanyak 403 calon India iaitu 43.76 % telah diantik untuk berkhidmat di dalam sektor awam. Menurut Pengerusi Suruhanjaya Perkhidmatan Awam Malaysia, YBhg. Tan Sri Mahmood Adam, permohonan untuk jawatan dalam perkhidmatan awam semakin meningkat pada tiga bulan ini, dan permohonan daripada Kaum India meningkat ketara. Beliau juga berkata, pada 13 April ini sebanyak 61,853 calon akan menduduki peperiksaan untuk jawatan Pegawai Tadbir dan Diplomatik manakala mereka yang telah lulus peperiksaan tersebut tidak perlu menduduki peperiksaan lagi. Bagi Jawatan Penolong Pegawai Tadbir Gred 27, temu duga akan diadakan pada bulan ini.